<u>2026 ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW19 (LW25) – கதிரவன் |
| தகப்பனார் பெயர்: | சுப்பிரமணி |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | அறிவியல் அலுவலர், தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் துறை |
| வயது : | 47 |

25.08.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3, 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தஞ்சாவூர், வட்டார தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.03.2020ம் தேதியன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணியிலிருந்தபோது,

கனம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி அவர்களின் கடித எண்.359/2020 நாள் 04.03.2020 கடிதத்தின்படி கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண்.50/2020 வழக்கில் இறந்த நபரின் பிரேத பரிசோதனையின்போது பெறப்பட்ட Item No.1 – தொடை எலும்பு, Item No.2– கையெலும்பு ஒன்று ஆகிய வழக்குப் பொருட்கள் முத்திரையுடன் கூடிய அட்டைப்பெட்டி ஒன்றை காவலர் 544 திரு.சுதாகர் அவர்கள் மூலம் ஆய்வகத்தில் MDU/DNA/58/2020 வழக்காக பெறப்பட்டு, பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

2. மேற்கூறிய தொடை எலும்பிலிருந்து DNA பிரித்து எடுக்கப்பட்டு, PCR Amplified STR செய்முறை மூலம் 15 STR குறிப்பிடங்கள் மற்றும் அமிலோ ஜெனின் பாலினம் குறிப்பிடத்திலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, ஓர் ஆண் DNA Profile பெறப்பட்டது. ஒரே நபரினுடைய வழக்குப் பொருட்கள் தொடை எலும்பு மற்றும் கையெலும்பு பெறப்பட்டதால் தொடை எலும்பிலிருந்து DNA Profile பெறப்பட்டதால் கையெலும்பு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படவில்லை. மேற்கூறிய தொடை எலும்பிலிருந்து பெறப்பட்ட DNA Profile –யை ஒப்பீடு செய்வதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட மகன் நந்தீஷ்குமார் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட மனைவி சித்ரா ஆகியோரின் ரத்த மாதிரிகளை சேகரிக்க இரண்டு FTA Cards எங்கள் ஆய்வகத்தில் இருந்து காவலர் 544 திரு.சுதாகர் என்பவர் மூலம் 10.09.2020 ம் தேதியன்று அனுப்பி வைக்கப்பட்டது.

3. மேற்கூறிய இரண்டு நபர்களின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இரண்டு FTA Cards கடந்த 16.09.2020 ம் தேதியன்று கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி அவர்களின் கடித எண்.895/2020 நாள் 16.09.2020 உத்தரவின்படி காவலர் 544 திரு.சுதாகர் அவர்கள் மூலம் எங்கள் ஆய்வகத்தில் MDU/DNA/119/2020 வழக்காக பெறப்பட்டு, பகுப்பாய்விற்கு

உட்படுத்தப்பட்டது. மேற்கூறிய இரண்டு நபர்களின் இரத்த மாதிரிகளிலிருந்து DNA பிரித்து எடுக்கப்பட்டு, PCR Amplified STR செய்முறை மூலம் 15 STR குறிப்பிடங்கள் மற்றும் அமிலோ ஜெனின் பாலினம் குறிப்பிடத்திலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, இரண்டு DNA Profile பெறப்பட்டன. ஒப்புக்கொள்ளப்பட்ட மகன் நந்தீஷ்குமார் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட மனைவி சித்ரா ஆகியோர்களின் DNA Profiles இறந்த நபரின் தொடை எலும்பிலிருந்து பெறப்பட்ட DNA Profile –டன் ஒப்பீடு செய்யப்பட்டது.

4. அவ்வாறு ஒப்பீடு செய்ததில் இறந்த சந்தேக நபரான செல்லப்பாண்டி தொடை எலும்பிலிருந்து பெறப்பட்ட DNA Profile, ஒப்புக்கொள்ளப்பட்ட மகன் நந்தீஷ்குமார் என்பவரின் DNA Profile–டன் 99.9999998 % ஒத்துப்போய்விட்டது. ஆகையால் இறந்த அடையாளம் தெரியாத நபர் செல்லப்பாண்டி என்பவர் நந்தீஷ்குமார் என்பவரின் உயிரியல் தந்தை என உறுதி செய்யப்பட்டு, அறிக்கையாக வழங்கப்பட்டது. அறிக்கை எண்கள் MDU/DNA/58/2020 நாள் 24.10.2020 மற்றும் MDU/DNA/119/2020 நாள் 24.10.2020 ஆகும்.

5. குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி அவர்கள் எங்கள் துறைக்கு அனுப்பிய கடிதம் 358/2020 நாள் 04.03.2020 **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி அவர்கள் எங்கள் துறைக்கு அனுப்பிய கடிதம் 359/2020 நாள் 04.03.2020 **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி அவர்கள் எங்கள் துறைக்கு அனுப்பிய கடிதம் 895/2020 நாள் 16.09.2020 **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அறிக்கை (Annexure 1 முதல் 4 வரை) **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

6. DNA பரிசோதனை சம்பந்தமாக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையிலிருந்து H.C.P.No.2520/2019 dated 23.03.2020 உத்தரவின் அடிப்படையில் ROC.No.39824/20/F1–ல் வழிகாட்டி முறைகள் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். FTA கார்டுகள் எங்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். FTA கார்டுகள் எந்த வழக்கிற்காக அனுப்பப்பட்டது என்ற விபரம் எங்கள் அலுவலக பதிவேட்டில் இருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் வேண்டுகோளின்படி எங்கள் பதிவேட்டில் எந்த மருத்துவமனையில் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும் என்று குறிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.

7. இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்ட பின்பு மாதிரிகளை எடுத்த மருத்துவர் படிவம் 1–டன் FTA கார்டுகளை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அந்த படிவத்தில் யாரிடமிருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டது என்ற குறிப்பு இருக்கும் என்றால் சரிதான். அந்த நபர்களின் அடையாளங்கள் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த படிவத்தில் யாரிடமிருந்து இரத்த மாதிரிகள் பெறப்படுகிறதோ அவர்களின் கையொப்பம் அல்லது கைரேகை பெற வேண்டும் என்றால் சரிதான். FTA கார்டுகளுடன் படிவம் 1–யை எங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான், பொதுவாக எல்லா வழக்குகளிலும் அனுப்புவதில்லை.

8. நான் இந்த வழக்கில் தொடை எலும்பு, நந்தீஷ்குமாரின் இரத்தம், திருமதி.சித்ராவின் ரத்தம் ஆகிய மூன்றையும் Genotype 15 STR முறையில் ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆய்வு செய்ய 25 STR முறைகள் உள்ளது என்றால் சரிதான். கூடுதலாக 24 அல்லது 25 முறைகள் ஆய்வு செய்வது சரியாக இருக்கும் என்றால் சரிதான். தொடை எலும்பு, நந்தீஷ்குமாரின்

D.N.A., ஆய்வு செய்ததில் அல்லியலில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.20 Annexure 4-ல் வரிசை எண்.1-ல் இரண்டு அல்லியல்களில் ஒரு அல்லியல் 15 STR முறையில் மகன் இரத்தத்திலிருந்து ஆய்வு செய்ததில் ஒன்று தாயின் அல்லியலுடன் ஒத்துப்போகிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஒன்று தாயின் அல்லியலுடன் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இரண்டாவது அல்லியலில் தந்தை வழியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. தொடை எலும்பை ஆய்விற்கு நான் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தொடை எலும்பு ஆய்விற்கு எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் 09.03.2020ம் தேதியாகும். எதிரி சித்ரா மற்றும் நந்தீஷ்குமாரின் இரத்த FTR கார்டுகள் எப்போது பெறப்பட்டது என்றால் 16.09.2020ம் தேதியாகும். அல்லியல் என்பது மரபணுவின் மாற்றுவடிவம் ஆகும் என்றால் சரிதான். உப்பு சேர்ந்த மணலில் எலும்பு நீண்ட நாட்களாக இருந்து, அதை எடுக்கும்போது, DNA மாறுபடுவதற்கு வாய்ப்புண்டு என்றால் மாறாமல் இருப்பதற்கு வாய்ப்புண்டு. மாறுவதற்கும் வாய்ப்புண்டு என்றால் சுற்றுச்சூழலை பொறுத்தது ஆகும்.

10. கடலிலிருந்து 50 அடி தூரத்தில் DNA மாறுபட வாய்ப்புண்டு என்றால் அந்த இடத்திலுள்ள தட்ப வெட்பநிலையை பொறுத்தது ஆகும். அல்லியலில் மாற்றம் ஏற்பட்டு, பகுப்பாய்வில் மரபணு மாறுபட்டு காணப்படும் என்றால் சரியல்ல. இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்ட விபரம் மற்றும் அது யார் கைவசம் இருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சரியான முறையில் DNA பகுப்பாய்வு செய்யவில்லை என்றாலும், அரசிற்கு வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

11. இரண்டு எலும்புகள் ஆய்விற்கு கிடைத்தப்போது, அந்த எலும்புகள் நேரடியாக மருத்துவரிடமிருந்து எங்கள் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டதா

என்றால் நீதிமன்றம் மூலமாக பெறப்பட்டது. இரண்டாவது கையெலும்பை நான் ஆய்வு செய்திருந்தால் அந்த எலும்பின் பகுப்பாய்வில் DNA மாறுபட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையாக ஆய்வு செய்யாததால் எனது அறிக்கை குறைபாடு உடையது என்றால் சரியல்ல. இறந்துபோன செல்லப்பாண்டியின் உடன்பிறந்த சகோதரி ஈஸ்வரி என்பவரின் இரத்த மாதிரி எனது ஆய்விற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.25 18:28:51 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.08.2026